என்னவோ தெரியவில்லை. ஏற்கனவே, அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Mini Super market at Nanganallur

* 443 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any Mini Super Market has been opened at Nanganallur near Madras City by the Nanganallur Co-operative Stores;

(*b*) whether any financial assistance has been given for this market; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) முதல் (உ) வரை: நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலை, நங்கநல்லூரில், 13-5-1973 அன்று, ரூ. 45,000 அரசு உதவி பெற்று ஓர் சிற்றங் காடியை ஆரம்பித்துள்ளது.

Mini deposits Scheme in Co-operative Banks

* 444 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether women candidates have been appointed in the Central Co-operative Banks as Agents for collecting money under the Mini Deposits Scheme; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) ஒரு பெண் வேட்பாளர் தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியில் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் வேலையில் சேரவில்லை.

Plantation Labour Housing Scheme

* 445 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the representatives of the Tamil Nadu Government discussed the housing for Plantation employees with the Union Minister for State for Housing about 20th April 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். தென் மாநிலங்களுக்காக 16—4—1973-ம் நாள் உதகமண்டலத்தில் மலைத்தோட்டத் தொழிலாளர்களின் வீட்டு வசதித் திட்டத்தை ஆராய ஒரு கூட்டம் நடந்தது.

(இ) மத்திய அரசு மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டுவசதித் திட்டத்தைத் தமிழ்நாடு, கேரளா, மைசூர் ஆகிய தென் மாநிலங்களும், மலைத் தோட்ட அதிபர்களும் அமுல் செய்வதில் உள்ள கஷ்டங்களை ஆராய்வதற்காகக் கூட்டம் ஒன்று உதகையில் கூட்டப்பட்டது. அதில் தமிழ்நாடு, மைசூர், கேரள மாநிலங்கள் பங்கு கொண்டன. மத்திய வீட்டு வசதி அமைச்சரும், மைசூர் மாநில வீட்டு வசதி அமைச்சரும் நானும் பங்கு கொண்டோம்.

கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, எல்லாவிதமான தோட்டத் தொழிலாளர்களுக்கும்—ஏனென்றால் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்—அவர்களுக்கும் இந்த வசதிகள் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ரப்பர் தோட்டம், தேயிலைத் தோட்டம், காபித் தோட்டம் ஆகியவற்றில் உள்ள தொழிலாளர்களுக்கும் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது அந்த மாநாட்டிலே சில முடிவுகள் மேற்கொள்ளப் பட்டதாக கூறினார்கள். அந்த முடிவுகளின் விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்த எந்த முறையிலே வீடுகள் கட்ட வேண்டுமென்பதைப் பற்றி முடிவுகள் செய்யப்பட்டன. ரூபாய் 3,200 வரையிலும் ஒரு வீட்டுக்கு உதவி செய்யப்படுகிறது. 50 சதவீதம் கடனாகவும் 37½ சதவீதம் மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. எஞ்சியுள்ள 12½ சதவீதச் செலவைத் தோட்டத் தொழிலதிபர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தோட்டங்களில் உள்ள பெரும்பாலான தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.